# இந்திய அரசியலமைப்பு - பகுதி - 26

## 26] அட்டவணைகள்

### பாடக்குறிப்புகள்

### முதல் அட்டவணை: (சரத்துக்கள் 1-4)

- மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசம் பற்றி குறிப்பிடுகிறது.
- இந்தியாவில் 29 மாநிலங்கள், 1 தலைநகர யூனியன் பிரதேசம்(டெல்லி) மற்றும் 6 யூனியன் பிரதேசங்கள் உள்ளன.

**மாநிலங்கள்**

- ஆந்திரப் பிரதேசம், அருணாச்சலப் பிரதேசம், அசாம், பீகார், சத்தீஸ்கர், கோவா, குஜராத், அரியானா, இமாச்சலப்பிரதேசம், ஜம்மு-காஷ்மீர், ஜார்கண்ட், கர்நாடகம், கேரளா, மத்தியப்பிரதேசம், மகாராஷ்டிரம், மணிப்பூர், மேகாலயா, மிசோரம், நாகலாந்து, ஒரிசா, பஞ்சாப், ராஜஸ்தான், சிக்கிம், தமிழ்நாடு, திரிபுரா, உத்திராஞ்சல், உத்திரப்பிரதேசம், மேற்கு வங்காளம், தெலுங்கானா.
- 'ஒரிசா' என்பது 'ஒடிசா' என 2011 ம் ஆண்டு மாற்றப்பட்டது.

winmeen

**யூனியன் பிரதேசங்கள்**

1. அந்தமான் நிக்கோபர் தீவுகள்
2. சண்டிகர்
3. தாத்ரா, நாகர்ஹவேலி
4. டையு டாமன்
5. லட்சத்தீவுகள்
6. புதுச்சேரி
7. டெல்லி

   - பாண்டிச்சேரி என்பது புதுச்சேரி என 2006 ம் ஆண்டு மாற்றப்பட்டது.

**இந்திய அரசியலமைப்பு (100 வது திருத்தம்) சட்டம் 2015**

- இந்திய அரசியலமைப்பு (100 வது திருத்தம் ) சட்டம் 2015 ம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. 28.5.2015 அன்று குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்றது.
- இதில் இந்தியா மற்றும் வங்கதேசத்திற்கு இடையே எல்லை ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டதின் விளைவாக, சில பரப்பிடங்களை இந்தியா பெறுவது மற்றும் சில பரப்பிடங்களை வங்கதேசத்திற்கு மாற்றுவது தொடர்பாக விடயங்களுக்கு செயல்வடிவம் கொடுக்க திருத்த மேற்கொள்ளப்பட்டது.
- உறைவிடம் பகுதிகளில் வசிப்பவர்களுக்கு குடியுரிமை உறுதி செய்யப்பட்டது.
- இதில் அரசியலமைப்பு சட்டத்தின் முதலாவது அட்டவணை திருத்தப்பட்டது.

  **இரண்டாவது அட்டவணை:**

சரத்துக்கள்: (59(3).65(3), 75(6), 97,125,148(3),158(3),164(5),186,221)

**சம்பளம்:**

- குடியரசுத் தலைவர்: Rs. 1,50,000(01.01.2016 முதல்)
- மாநில ஆளுநர்- Rs.1,10,000 (01.01.2016 முதல்)
- மக்களவை சபாநாயகர்
- மக்களவை துணைசபாநாயகர்
- மாநிலங்களவைத் தலைவர்
- மாநிலங்களவைத் துணைத் தலைவர்
- மாநில சட்டப்பேரவை சபாநாயகர்
- மாநில சட்டப்பேரவை துணை சபாநாயகர்

- மாநில சட்டமேலவைத் தலைவர்
- மாநில சட்ட மேலவைத் துணைத் தலைவர்.
- உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி-Rs.1,00,000(01.01.2016 முதல்)
- உச்சநீதிமன்ற நீதிபதிகள்- Rs.90,000(01.01.2016 முதல்)
- உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி - Rs.90,000(01.01.2016 முதல்)
- உயர்நீதிமன்ற நீதிபதிகள்- Rs.80,000(01.01.2016 முதல்)
- கணக்காயர்(ம) தணிக்கைத்துறை தலைவர்- Rs.90,000(01.01.2016 முதல்)

**மூன்றாவது அட்டவணை**

(சரத்துக்கள்: 75(4),99,124(6),148(2),164(3),188,219)

**பதவிப் பிரமாணம்**

- மத்திய அமைச்சர்கள்
- நாடாளுமன்ற உறுப்பினர்கள்
- உச்சநீதிமன்ற நீதிபதிகள்
- இராஜாங்க மந்திரிகள்
- சட்டமன்ற உறுப்பினர்கள்
- உயர்நீதிமன்ற நீதிபதிகள்

**நான்காவது அட்டவணை**

(சரத்துக்கள்: 4(1),80(2))

ஒவ்வொரு மாநிலத்திற்கும் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கும் மாநிலங்களவையில் இடங்களின் பங்களிப்பு.

| | |
|---|---|
| உத்திரப்பிரதேசம் | 31 |
| மகாராஷ்டிரம் | 19 |
| ஆந்திரப்பிரதேசம் | 11 |
| தெலுங்கானா | 7 |
| தமிழ்நாடு | 18 |

| | |
|---|---|
| பீகார் | 16 |
| மேற்கு வங்காளம் | 16 |
| கர்நாடகம் | 12 |
| குஜராத் | 11 |
| மத்தியப்பிரதேசம் | 11 |
| ஒடிசா | 10 |
| ராஜஸ்தான் | 10 |
| கேரளா | 9 |
| அசாம் | 7 |
| பஞ்சாப் | 7 |
| ஜார்கண்ட் | 6 |
| அரியானா | 5 |
| சத்தீஸ்கர் | 5 |
| ஜம்மு-காஷ்மீர் | 4 |
| உத்திரகாண்ட் | 3 |
| இமாச்சலப் பிரதேசம் | 3 |
| டெல்லி | 3 |
| கோவா | 1 |
| நாகலாந்து | 1 |
| மணிப்பூர் | 1 |
| திரிபுரா | 1 |
| மேகாலயா | 1 |
| சிக்கிம் | 1 |
| மிசோரம் | 1 |
| அருணாச்சலப் பிரதேசம் | 1 |

| | |
|---|---|
| புதுச்சேரி | 1 |

**ஐந்தாவது அட்டவணை**

**(சரத்துக்கள்: 244(1))**

- அஸ்ஸாம், மேகாலாயா, திரிபுரா, மிசோரம் ஆகிய மாநிலங்களைத் தவிர மற்ற மாநிலங்களில் பட்டியல் இடங்களையும் பழங்குடி பரப்பிடங்களையும், நிர்வாகம் செய்வது குறித்து கூறப்பட்டுள்ளது.
- ஆளுநர் ஒவ்வொரு வருடமும், குடியரசுத் தலைவர் கேட்கும்போது பழங்குடி பரப்பிட நிர்வாகம் குறித்த அறிக்கையைக் கொடுக்க வேண்டும்.
- **பழங்குடி ஆலோசனக் குழுமம்-** பழங்குடி பரப்பிடங்களை உள்ளடக்கிய ஒவ்வொரு மாநிலமும் பழங்குடி ஆலோசனைக் குழுமம் அமைக்க வேண்டும். 20 உறுப்பினர்களுக்கு குறைவில்லாத அதில் 4 ல் 3 பங்கு உறுப்பினர்கள் சட்டப்பேரவையின் பழங்குடி பகுதி பிரதிநிதிகளாக இருக்க வேண்டும்.
- இக்குழுமம் பழங்குடி மக்களின் நலம் மற்றும் முன்னேற்றம் குறித்து ஆலோசனை தரவேண்டும்.
- உறுப்பினர்களின் எண்ணிக்கை, நியமனம், தலைவர், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் குறித்த விதிகளையும், ஆளுநர் வகுக்கலாம். கூட்டம் நடத்துவது குறித்தும் பட்டியல் பரப்பிடங்களின் அமைதி மற்றும் நல்ல அரசாங்கம் குறித்து வகை முறைகளை ஆளுநர் உருவாக்கலாம். குறிப்பாக,
    - இடங்களை மாற்றுதல், நிலத்தி பகிர்ந்தளித்தல் பழங்குடி மக்களுக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்பவர்களுக்கான ஒழுங்குமுறை.

**பட்டியல் இடங்கள்:**

- பட்டியல் இடங்களை அறிவிக்கும் அதிகாரம் குடியரசுத் தலைவரிடம் உள்ளது.
- பட்டியல் இடங்களை அதிகப்படுத்துவது குறித்து ஆளுநரிடம் ஆலோசித்த பிறகு குடியரசுத் தலைவர் அறிவிக்கலாம்.

**ஆறாவது அட்டவணை**

**(சரத்துக்கள்: 244(2), 275(1))**

- அஸ்ஸாம், மேகாலாயா, திரிபுரா, மிசோரம் ஆகிய மாநிலங்களில் மட்டும் பட்டியல் இடங்களையும், பழங்குடி பரப்பிடங்களையும் நிர்வாகம் செய்வது குறித்த வகைமுறைகளைக் குறிப்பிடுகிறது.

**தன்னாட்சி மாவட்டங்கள்/ மண்டலங்கள்**

- ஒரு தன்னாட்சி மாவட்டத்தில் வேறுபட்ட பழங்குடி மக்கள் இருந்தால் அப்பகுதிகளை தன்னாட்சி மண்டலங்களாக ஆளுநர் அறிவிக்கலாம்.
- பரப்பிடங்களை சேர்த்தல், விலக்குதல், புதிய தன்னாட்சி மாவட்டங்களை உருவாக்குதல், தன்னாட்சி மாவட்டப் பகுதிகளை அதிகரித்தல், குறைத்தல், இரு பகுதிகளை இணைத்தல்,பெயர் மாற்றுதல் குறித்து ஆளுநர் மேற்கொள்ளலாம்.
- ஆனால் அதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையைப் பெற்று செயல்படுதல் வேண்டும்.

**மாவட்ட அவைமற்றும் மண்டல அவை**

- ஒவ்வொரு தன்னாட்சி மாவட்டங்களிலும் 30 உறுப்பினர்களுக்கு குறைவில்லாத மாவட்ட அவை இருத்தல் வேண்டும்.
- இதில் 4 உறுப்பினர்களுக்கு மேல் அல்லாமல் ஆளுநராலும், மீதி உறுப்பினர்கள் வயது வந்தோர் வாக்குரிமை மூலம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

**ஏழாவது அட்டவணை**

**(சரத்து: 246)**

**இந்திய அரசியலமைப்புச் சட்டம் தொடங்கிய பொழுது உள்ள துறைகள்**

பட்டியல் I: மத்தியப் பட்டியல் - 97 துறைகள்

பட்டியல் II: மாநிலப் பட்டியல் - 66 துறைகள்

பட்டியல் III: பொதுப் பட்டியல் - 47 துறைகள்

**தற்பொழுது உள்ள துறைகள்**

பட்டியல் I: மத்தியப் பட்டியல் - 97 துறைகள்

பட்டியல் II: மாநிலப் பட்டியல் - 66 துறைகள்

பட்டியல் III: பொதுப் பட்டியல் - 47 துறைகள்

**பட்டியல் I: மத்தியப் பட்டியல்**

1. இந்தியப் பாதுகாப்பு ராணுவம்
2. கடற்படை, காலாட்படை, வான் படை மற்றும் மத்திய அரசின் ஆயுதப் படைகள்.

   2-A மத்திய அரசின் ஆயுதப்படைகளை மாநிலங்களில் அமர்த்துதல்
3. கண்டோன்மெட் பகுதிகளை சீரமைத்தல், அப்பகுதிகளில் உள்ள உள்ளாட்சி அமைப்புகள்.
4. கடற்படை, காலாட்படை, வான் படை வேலைகள்
5. ஆயுதம், சுடும் இயந்திரங்கள், வெடிப் பொருள்கள்
6. அணுசக்தி மற்றும் அதற்கான கனிம வளங்கள்.
7. பாதுகாப்பிற்காக விளம்பப்படும் தொழிற்சாலைகள்.
8. மத்திய புலனாய்வு நிறுவனம் CBI மற்றும் புலனாய்வு.

9. பாதுகாப்பு/ இராணுவம், வெளியுறவுத் தொடர்பு, பாதுகாப்பு குறித்த முன்னெச்சரிக்கை கைது.
10. வெளியுறவுத் தொடர்பு.
11. தூதரகம், வியாபார பிரதிநிதித்துவம்.
12. ஐக்கிய நாடுகள் அவை
13. பன்னாட்டு மாநாடுகள், கூட்டமைப்பு, வேறு அமைப்புகளில் பங்கேற்பது.
14. வெளிநாடுகளுடன் ஒப்பந்தங்கள் போடுவது மற்றும் அதனை செயல்படுத்துவது.
15. போர் மற்றும் அமைதி
16. வெளியுறவு அதிகார வரம்பு
17. குடியுரிமை, வெளிநாட்டவர் குடியுரிமை பெறல்.
18. நாடு கடத்துதல்
19. இந்தியாவிற்கு சேர்த்தல், வெளியேற்றுதல், கடவுச் சீட்டு மற்றும் வீசா
20. இந்தியாவிற்கு வெளியே உள்ள இடங்களுக்கு புனிதப் பயணம் செல்லுதல்.
21. பன்னாட்டு கடல் எல்லை / வான் எல்லைகளில் நடைபெறும் கடற்கொள்ளை மற்றும் குற்றங்கள் தொடர்பான, நாட்டுச் சட்டங்களின் குற்றங்கள்.
22. தொடர்வண்டி
23. தேசிய நெடுஞ்சாலைகள்
24. உள்நாட்டு நீர் வழிகளில் செல்லக்கூடிய கப்பல் போக்குவரத்து பயணம்.
25. கடல் கப்பல் போக்குவரத்து, வணிகப் போக்குவரத்து தொடர்பான, மாநிலங்கள் அளிக்கும் கல்வி மற்றும் பயிற்சி தொடர்பாக.
26. கலங்கரை விளக்கம்.
27. நாடாளுமன்றம் விளம்பக்கூடிய பெரிய துறைகள் மற்றும் அதன் சீரமைப்பு, அமைப்பு, அதிகாரங்கள்.
28. துறைமுக நொய் தடுப்பு முகாம்கள், கடல் சார் மருத்துவமனைகள்.

29. வான்வழி போக்குவரத்து, வானூர்தி, விமான நிலையம், அதன் தொடர்பான வழிமுறைகள், வான் போக்குவரத்து விதிகள், மாநிலம் அளிக்கும் விமானம் தொடர்பான கல்வி மற்றும் பயிற்சிகள்.
30. இயந்திரப் படகுகள் மூலம் செல்லும் வான்வழிப் பயணிகள் மற்றும் பண்டங்கள், தொடர்வண்டி.
31. தபால், தந்தி, தொலைபேசி, கம்பியில்லாத தொடர்பு, ஒளிபரப்பு மற்றும் அதன் தொலைத் தொடர்பு முறைகள்.
32. மத்திய அரசின் சொத்து மற்றும் அதன் வருவாய்.
33. (Repeal)
34. இந்திய மாநிலங்களை ஆட்சி செய்தவர்களின் சொத்துக்களை பாதுகாப்பது.
35. மத்திய அரசின் பொதுக் கடன்.
36. பணத்தாள், நாணயங்கள், சட்டப்பூர்வ, பணம், வெளிநாட்டு பணப் பரிமாற்றம்.
37. வெளிநாட்டுக் கடன்
38. இந்திய ரிசர்வ் வஙி
39. அஞ்சலக சேமிப்பு வங்கி
40. மத்திய அல்லது மாநில அரசால் ஒருங்கிணைக்கப்படும் பரிசுச் சீட்டு
41. வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் வணிகம், இறக்குமதி, ஏற்றுமதி, சுங்கவரி எல்லை வரையறை.
42. மாநிலங்களுக்கிடையே உள்ள வர்த்தகம் மற்றும் வணிகம்.
43. வங்கிகள், காப்பீடு, நிதி நிறுவனங்கள் உள்ளிட்ட வர்த்தக நிறுவனங்களை உருவாக்குதல், முறைப்படுத்துதல், முடிந்துவைத்தல்(இதில் கூட்டுறவு சங்கங்கள் இல்லை)
44. ஒரு மாநிலத்திற்கு மட்டும் பொருந்தாத வர்த்தகம் அல்லது வர்த்தகம் அல்லாத நிறுவனங்கள்(இதில் பல்கலைக்கழகங்கள் உள்ளடங்காது)
45. வங்கிகள்
46. பரிமாற்ற கருவிகள், காசோலை, கடன் உறுதியூட்டு பத்திரம்.

47. காப்பீடு
48. பங்குச் சந்தை
49. காப்புரிமை, கண்டுபிடிப்பு, வடிவமைப்பு, உரிமம், வணிகக் குறியீடு, வியாபாரக் குறியீடு.
50. எடை மற்றும் அளவு தரம் உருவாக்குதல்.
51. இந்தியாவிற்கு வெளியே ஏற்றுமதியாகும் பொருட்களுக்கான அல்லது நிர்ணயம் அல்லது ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு அனுப்பும் பொருட்களுக்கான தர நிர்ணயம்.
52. நாடாளுமன்றத்தால் அறிவிக்கக்கூடிய பொது நலனுக்கான மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள தொழிற்சாலைகள்.
53. எண்ணெய் வயல்கள், தாது எண்ணெய் வளங்கள், பெட்ரோல் பொருட்கள், எரியும் பொருட்கள்.
54. பொது நலனுக்காக என்று அறிவிக்கப்பட்ட சுரங்கங்கள் மற்றும் கனிம வள வளர்ச்சி குறித்து வகைமுறை
55. சுரங்கங்கள் மற்றும் எண்ணெய் வயல்களில் தொழிலாளர் பாதுகாப்பு தொடர்பான வகைமுறை.
56. நாடுகளுக்கிடையேயான நதிகள் பள்ளத்தாக்குகள் தொடர்பான ஒழுங்குமுறை மற்றும் வளர்ச்சி.
57. எல்லைக்கு அப்பால் மீன்பிடித்தல்.
58. மத்திய முகவான்மையால் உற்பத்தி, அளிப்பு, பங்கீடு செய்யப்படும் உப்பு.
59. ஒப்பியம் உற்பத்தி, விற்பனை, ஏற்றுமதி
60. திரைப்படக் கண்காட்சிக்கு அனுமதி
61. மத்திய அரசு ஊழியர்களின் தொழில் தகராறுகள்.
62. தேசிய நூலகம், இந்திய அருங்காட்சியகம், இம்பீரியல் போர் அருங்காட்சியகம், விக்டோரியா நினைவரங்கம், இந்திய போர் நினைவுச் சின்னம், மற்றும் இந்திய அரசால் நிதி வழங்கக்கூடிய நிறுவனங்கள்.

63. பனாரஸ் இந்து பல்கலைக்கழகம், அலிகார் முஸ்லீம் பல்கலைக்கழகம், டெல்லி பல்கலைக்கழகம், சரத்து 371 ன் படி உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகம் நாடாளுமன்றத்தால் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவை விளம்பக்கூடிய பிற நிறுவனங்கள்.
64. தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவை என்று நாடாளுமன்றத்தால் விளம்பக்கூடிய, மத்திய அரசின் நிதி பெறும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கல்வி நிறுவனங்கள்.
65. தொழில், தொழில்நுட்ப பயிற்சி, காவல் அலுவலர்களுக்கு பயிற்சி, சிறப்பு, ஆராய்ச்சி படிப்புகள், குற்றத்தை கண்டறிய உதவும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப உதவி.
66. உயர்கல்வி, ஆராய்ச்சி மற்றும் அறிவியல் தொழில்நுட்ப நிறுவனங்களின் தர நிர்ணயம் மற்றும் ஒருங்கிணைப்பு.
67. நாடாளுமன்றத்தால் அறிவிக்கக்கூடிய தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பழங்கால, வரலாற்று நினைவுச் சின்னங்கள் மற்றும் ஆவணங்கள், தொல்பொருள் பகுதிகள்.
68. இந்திய சர்வே Geoligical, botanical, Zoological, Anthropological, Meteorelogical நிறுவனங்கள்.
69. மக்கள்தொகை கணக்கெடுப்பு.
70. மத்திய அரசுப் பணியாளர்கள், அனைத்திந்தியப் பணிகள், மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம்.
71. இந்தியத் தொகுப்பு நிதியிலிருந்து வழங்கக்கூடிய, மத்திய அரசால் வழங்கக்கூடிய ஓய்வூதியங்கள்.
72. நாடாளுமன்ற தேர்தல், சட்டமன்றத் தேர்தல், குடியரசுத் தலைவர், குடியரசுத் துணைத் தலைவர் தேர்தல் ஆணையம்.
73. மக்களவை சபாநாயகர், துணை சபாநாயகர், மாநிலங்களவை தலைவர் மற்றும் துணைத் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஊதியம் மற்றும் படிகள்.

74. நாடாளுமன்ற அதிகாரம் ,சலுகைகள், அவைகளின் உறுப்பினர்களின் நாடாளுமன்றத்தால் நியமிக்கப்படும் குழுக்கள், ஆணையம், அதன் முன் சாட்சியம் அளிப்பது, ஆவணம் தாக்கல் செய்வது.
75. குடியரசுத் தலைவர் மற்றும் ஆளுநரின் ஊதியம், வசதிகல், சலுகைகள், உரிமைகள், மத்திய அமைச்சர்களின் ஊதியம் மற்றும் வசதிகள், இந்தியத் தலைமை கணக்காளரின் ஊதியம் வசதிகள், உரிமைகள், பணிக் கட்டுப்பாடுகள்.
76. மத்திய, மாநில கணக்குத் தணிக்கை.
77. உச்சநீதிமன்றத்தின் அமைப்பு, அதிகாரம், வரம்பு(நீதிமன்ற அவமதிப்பு உள்ளிட்ட) கட்டணம், வழக்காடும் நபர்கள் குறித்த விடயங்கள்.
78. உயர்நீதிமன்றத்தின் அலுவலர்கள், ஊழியர்கள் தவிர அமைத்தல், அமைப்பு, வழக்காடும் நபர்கள்.
79. உயர்நீதிமன்றத்தின் அதிகார வர்ம்பை நீட்டித்தல், மத்திய ஆட்சி எல்லைகளை அதிகார வரம்பிலிருந்து குறைத்தல்.
80. ஒரு மாநில காவல்துறை உறுப்பினர்களின் அதிகார வரம்பினை அந்த மாநிலத்திற்கு வெளியில் உள்ள ஒரு இடத்திற்கு அதிகார வரம்பின் அதிகரித்தல், ஆனால் அந்த இடத்திற்கு அதிகார வரம்பின் அதிகரித்தல், ஆனால் அந்த இடம் எந்த மாநிலத்தில் உள்ளதோ அதன் ஒப்புதல் பெற வேண்டும்
81. ஒரு மாநிலத்தில் இருப்புப்பாதை காவல்துறையின் அதிகார வரம்பு, மாநிலங்களுக்கிடையேயான குடிப்பெயர்ச்சி, மாநிலங்களுக்கிடையே பிரித்து வைத்தல்.
82. வேளாண் வருமானம் தவிர வருமானத்தின் மீதான வரிகள்
83. ஏற்றுமதி வரி உள்ளிட்ட சுங்க வரிகள்
84. மனிதனின் நுகர்விற்கான அல்கஹால் பானங்கள், ஓபியம், போதையூட்டும் பொருட்கள் தவிர இந்தியாவில் தயாரிக்கப்படும் புகையிலை மீதான வரி.

(மருத்துவ மற்றும் கழிவறை பொருள்களில் அல்கஹால் இருக்கும் பொருட்கள் உள்ளடங்கும்)

85. உற்பத்தி வரி
86. கம்பெனி மற்றும் தனி ஆட்களின் வேளாண் நிலம் சொத்து மூலதன மதிப்பின் மீதான வரி கம்பெனியின் மூலதனத்தின் மீதான வரி
87. வேளாண் நிலம் தவிர பிற சொத்துகள் மீதான அடை சொத்துத் தீர்வை
88. வேளாண் நிலம் தவிர பிற சொத்துக்கள் மீதான இறக்குரிமை வரி
89. இருப்புப்பாதை, அடல், வான்வழி பயணிகளின் மீதான சேர்முனௌ வரிகள், இருப்புப்பாதை கட்டணம் மற்றும் சரக்குகளின் மீதான வரிகள்.
90. பங்கு வர்த்தகங்கள் மற்றும் எதிர்கால சந்தை பரிவர்த்தனையின் மீதான முத்திரைத் தீர்வை தவிர பிற வரிகள்.
91. மாற்றுச்சீட்டு, காசோலை, கடன் உறுதிச்சீட்டு, கப்பல் சரக்குக் கட்டணம், கடன் கடிதம், காப்பீட்டு திட்டங்கள், பங்கு மாற்றம், கடன் பத்திரங்கள், பிரதிநிதித்துவம் மற்றும் பெற்றவைகள் மீதான முத்திரைத் தீர்வைகள்
92. செய்தித்தாள் விற்பனை மற்றும் வாங்குதல், விளம்பரங்கள் மீதான வரிகள்

92- A மாநிலங்களுக்கிடையேயான வியாபாரம் அல்லது வணிகத்தில் செய்தித்தாள் விற்பனை மற்றும் வாங்குதல் தவிர பிற விற்பனை மற்றும் வாங்குதல் மீதான வரிகள்

92-B மாநிலங்களுக்கிடையேயான வணிகத்தில் நடைபெறும் பொருட்களின் மீதான வரிகள்

92- C சேவை வரிகள்

93. இப்பட்டியலில் உள்ளவற்றின் தொடர்பான சட்டங்களுக்கு எதிரானக் குற்றங்கள்.

94. இப்பட்டியலில் உள்ளவை தொடர்பாக விசாரணை, கணக்கெடுப்பு மற்றும் புள்ளி விபரங்கள்

95. இப்பட்டியலில் உள்ளவை தொடர்பாக உச்சநீதிமன்றம் தவிர அனைத்து நீதிமன்றங்களின் அதிகாரம் மற்றும் அதிகார வரம்பு.

96. இப்பட்டியல் தொடர்பான கட்டணங்கள் ஆனால் நீதிமன்ற கட்டணம் உள்ளஅங்காது.

97. பட்டியல் II அல்லது III ல் குறிப்பிடாத விடயங்கள், இரண்டிலும் குறிப்பிடாத வரிகள்.

- உள்ளீடு 2-A: 42 வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தின்படி இணைக்கப்பட்டது.
- உள்ளீடு 33: 7 வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தின்படி நீக்கப்பட்டது.
- உள்ளீடு 79: 7 வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தின்படி மாற்றப்பட்டது.
- உள்ளீடு 92- A: 6 வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தின்படி இணைக்கப்பட்டது.
- உள்ளீடு 92–B: 46 வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தின்படி இணைக்கப்பட்டது.
- உள்ளீடு 92- C: 88 வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தின்படி இணைக்கப்பட்டது.

**பட்டியல் II: மாநில பட்டியல்**

1. பொது அமைதி (கடற்படை, காலாட்படை, வான்படை அல்லது பிற ஆயுதப்படைகள் மத்திய அரசின் தவிர)
2. காவல்த்துறை(இருப்புப்பாதை மற்றும் கிராம காவல் உள்ளிட்ட)

3. உயர்நீதிமன்றத்தின் அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் வரி மற்றும் வருவாய் நீதிமன்றங்கள் தொடர்பான வகைமுறைகள், உச்சநீதிமன்றம் தவிர அனைத்து நீதிமன்ற கட்டணங்கள்.
4. சிறைகள், சீர்திருத்த இல்லங்கள், இளங்குற்றவாளிகள் சீர்திருத்த நிறுவனங்கள், மற்ற மாநிலங்கள் சிறைகளை பயன்படுத்துதல் தொடர்பானவை.
5. உள்ளாட்சி அமைப்புகள், மாநகராட்சிகள், அறக்கட்டளைகள், மாவட்ட வாரியங்கள், சுரங்க தீர்வு அமைப்புகள், உள்ளாட்சி கிராம நிர்வாகம் தொடர்பான பிற உள்ளாட்சி அமைப்புகள்.
6. பொது நலன் சுகாதாரம், மருத்துமனைகள் மற்றும் மருந்தகங்கள்.
7. புனிதப் பயணங்கள்(இந்தியாவிற்கு வெளியில் உள்ள இடங்களை தவிர)
8. போதையூட்டக் கூடிய பானங்களின் உற்பத்தி, வைத்திருத்தல், போக்குவரத்து, வாங்குதல் மற்றும் விற்பனை.
9. செயலிழந்த மற்றும் வேலையில்லாதவர்களுக்கான உதவி.
10. சுடுகாடு மற்றும் இடுகாடு
11. (Repeal)
12. மாந்லத்தின் கட்டுப்பாடு அல்லது நிதி உதவி பெறும் நூலகங்கள், அருங்காட்சியகங்கள்.
13. பட்டியல் I ல் குறிப்பிடப்படாத சாலைகள், பாலங்கள், படகுப் போக்குவரத்து, தொலைத்தொடர்பு, நகர்புற டிராம்வழிகள், கயிறு வழிகள், உள்நாட்டு நீர்ப் போக்குவரத்து.
14. வேளாண்மை, வேளாண்மை கல்வி மற்றும் ஆராய்ச்சி, பூச்சி எதிர் பாதுகாப்பு தாவர நோய் பாதுகாப்பு.
15. விலங்கு நோய்களிலிருந்து பாதுகாப்பு.
16. கால்நடை எல்லைமீறல் பாதுகாப்பு மற்றும் பட்டி.

17. நீர் விநியோகம், பாசனம், கால்வாய், வடிகால், நீரை நிறுத்திவைக்கும் கரை, நீர் தேக்கி வைத்தல் நீர் மின்சாரம்.
18. நில உரிமை, வாடகைதாரர்- உரிமையார், வாடகை, வசூல், வேளாண் நிலங்கள் ஒதுக்கல், மற்றும் மாற்றுதல் முன்னேற்றம், வேளாண் கடன்கள், குடியேற்றம்.
19. (Repeal)
20. (Repeal)
21. மீன் பிடித்தல்
22. நீதிமன்றக் காப்பில் உள்ளவர்கள்.
23. சுரங்கங்கள் மற்றும் கனிம வளர்ச்சி(மத்திய அரசின் கட்டுப்பாடுடன்)
24. முதல் பட்டியலில் உள்ள 7 மற்றும் 52 க்கு கட்டுப்பட்ட தொழிற்சாலைகல்
25. எரிவாயு மற்றும் எரிவாயு பொருட்கள்.
26. பட்டியல் - III ல் உள்ள 33- உள்ளீடுக்கு கட்டுப்பட்ட மாநிலத்திற்குள் உள்ள வர்த்தகம் மற்றும் வணிகம்.
27. பட்டியல் - III ல் உள்ள 33- உள்ளீடுக்கு கட்டுப்பட்ட பொருட்களின் உற்பத்தி, அளிப்பு மற்றும் பகிர்வு.
28. சந்தைகள் மற்றும் காட்சியகங்கள்.
29. (Repeal)
30. பணம் கடனளித்தல், பணம் கடனளிப்பவர், விவசாயக் கடன் உதவி, நிவாரணம்.
31. சத்திரங்கள் மற்றும் சத்திரங்கள் காப்போர்.
32. பட்டியல் I ல் குறிப்பிடப்படாத கழகங்களை உருவாக்குதல், ஒழுங்குபடுத்துதல், கலைத்தல், பல்கலைக்கழகங்கள், கழகமல்லாத வியாபாரம், இலக்கிய, அறிவியல், சமய மற்றும் பிற சங்கங்கள் அமைப்புகள், கூட்டுறவு சங்கங்கள்.

33. அரங்குகள் மற்றும் நாடக அரங்குகள், பட்டியல் I ல் உள்ள உள்ளீடு 60 க்கு கட்டுப்பட்ட திரைப்படங்கள் விளையாட்டு, களியாட்டங்கள் மற்றும் மன மகிழகங்கள்.
34. பந்தயம் மற்றும் சூதாட்டம்.
35. மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ள சார்ந்த வேலைப்பாடுகள், நிலங்கள் மற்றும் கட்டிடங்கள்.
36. (Repeal)
37. நாடாளுமன்றச் சட்டங்களுக்கு உட்பட்ட, மாநில சட்ட மன்றத் தேர்தல்கள்.
38. சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டப்பேரவையின் சபாநாயகர், துணிஅச் சபாநாயகர், மேலவை இருப்பின் மேலவைத் தலைவர், துணைத் தலைவர் ஆகியோரின் ஊதியம் மற்றும் படிகள்.
39. சட்டப்பேரவை மற்றும் குழுக்களின் உறுப்பினர்களின் மேலவை இருந்தால் அதன் உறுப்பினர்களின் அதிகாரங்கள், சலுகைகள், பாதுகாப்புகள், சட்டமன்ற குழுக்கள் முன்னால் சாட்சியம் அல்லது ஆவணம் சமர்பித்தல்.
40. மாநில அமைச்சர்களின் ஊதியங்கள் மற்றும் படிகள்.
41. மாநிலப் பொதுப்பணிகள், மாநிலப் பொதுப் பணிகள் ஆணையம்.
42. மாநிலத் தொகுப்பு நிதியிலிருந்து வழங்கக்கூடிய, மாநில அரசால் வழங்கக்கூடிய ஓய்வூதியங்கள்.
43. மாநில அரசு பொதுக்கடன்கள்
44. புதையல்கள்.
45. நில வருவாய், வருவாய் நிர்ணயம் மற்றும் வசூல், நில ஆவணங்களை பராமரிப்பது வருவாய்காக நிலங்களை அளப்பது, உரிமைப் பதிவு, வருவாய் வாராதீனம்.
46. வேளாண் வருமானம் மீதான வரிகள்
47. விவசாய நிலங்களுக்கான இறக்குரிமை தீர்வைகள்.
48. விவசாய நிலத்திற்கான அடைச் சொத்து தீர்வை

49. நிலங்கள் மற்றும் கட்டிடங்கள் மீதான வரிகள்.
50. நாடாளுமன்ற சட்டத்திற்கு உட்பட்ட, கனிம வள வரிகள்
51. மனித நுகர்வுக்கான மத வகைகள், ஓபியம், கஞ்சா, வேறு போதை மருந்துகள் ஆகியவை மாநிலத்தில் உற்பத்தி செய்யப்பட்டிருந்தால் அதன் மீதான தீர்வைகள்(மருந்து மற்றும் கழிவரைப் பயன்பாட்டிற்கு அல்கஹால் இருந்தால் பொருந்தாது)
52. உள்ளூர் பகுதிகளில் நுகர்வு, பயன்பாடு, விற்பனை ஆகியவற்றுக்காக வரும் பொருட்களின் மீதான நுழைவு வரிகள்
53. மின்சார நுகர்வு அல்லது விற்பனை மீதான வரிகள்.
54. பட்டியல் 92 A க்கு உட்பட்டு செய்தித்தாள் அல்லாத பொருட்களின் விற்பனை, வாங்குதல் மீதான வரிகள்
55. செய்தித்தாள்களின் விளம்பரங்கள், வானொலி அல்லது தொலைக்காட்சி விளம்பரங்கள் தவிர பிற விளம்பரங்கள் மீதான வரிகள்
56. உள்நாட்டு சாலை, நீர் பொருட்கள் மற்றும் பயணிகளின் மீதான வரிகள்
57. வாகனங்கள் மீதான வரிகள்
58. விலங்குகள் மற்றும் படகுகள் மீதான வரிகள்
59. சுங்க சாவடி கட்டணம்
60. தொழில், வியாபாரம் மற்றும் வேலை மீதான வரிகள்
61. மூலதனமாக்கல் வரி
62. பொழுது போக்கு, மனமகிழகங்கள், பந்தயம் சூதாட்டம் உள்ளிட்ட உல்லாசங்கள் மீதான வரிகள்
63. பட்டியல் I ல் குறிப்பிடப்படாத ஆவணங்களுக்கு முத்திரை தீர்வை.
64. இந்தப் பட்டியலில் உள்ளவைகள் தொடர்பான சட்டங்களுக்கு எதிரான குற்றங்கள்
65. உச்சநீதிமன்றம் தவிர அனைத்து நீதிமன்றங்களுக்கான அதிகார வரம்பு மற்றும் அதிகாரங்கள் இப்பட்டியலில் உள்ளவை தொடர்பாக

**66.** நீதிமன்ற கட்டணங்கள் தவிர, இப்பட்டியலில் உள்ள விவகாரங்களுக்கான கட்டணங்கள்.

**1.** இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தபோது தண்டனை இந்தியச் சட்டத்தில் உள்ள அனைத்து விவகாரங்கள் உள்ளிட்ட குற்றவியல் நடைமுறைச் சட்டம் (பட்டியல் I, பட்டியல் II உள்ள கடற்படை, காலாற்படை, வான் படை தவிர)

2. இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தபோது குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் உள்ள அனைத்து விவகாரங்கள் உள்ளிட்ட அனைத்து குற்ற விசாரணைகள்.

- உள்ளீடு 11,19,20,29: 42 வது அரசியலைமைப்புச் சட்டத் திருத்தத்தின்படி (1976) நீக்கப்பட்டது.
- உள்ளீடு 36: 7 வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தின்படி (1956) இணைக்கப்பட்டது.
- உள்ளீடு 54: 6வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தின்படி (1956) மாற்றப்பட்டது.

**பட்டியல் III: பொதுப் பட்டியல்**

1. இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தபோது தண்டனை இந்தியச் சட்டத்தில் உள்ள அனைத்து விவகாரங்கள் உள்ளிட்ட குற்றவியல் நடைமுறைச் சட்டம்(பட்டியல் I, பட்டியல் II உள கடற்படை, காலாற்படை, வான்படை தவிர)
2. இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தபோது குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் உள்ள அனைத்து விவகாரங்கள் உள்ளிட்ட அனைத்து குற்ற விசாரணைகள்

3. மாநிலத்தில் பாதுகாப்பு, பொது அமைதி, சமூக அத்தியாவசியப் பணிகள் ஆகிய காரணங்களுக்காக தடுப்புக் காவல்
4. உள்ளீடு 3 ல் உள்ள காரணங்களுக்காக,ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு காவல் கைதிகளை, குற்றம் சட்டப்பட்ட நபர்களை, தடுப்புக் காவலில் உள்ள நபர்கள்.
5. திருமணம், மணமுறிவு, குழந்தைகள், பாலர்கள், தத்து, உயில், உயிலின்மை, இறக்குரிமை கூட்டுக் குடும்பம், பாகப்பிரிவினை, அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன் தனிநபர் சட்டப்படி நிதிபூர்வ நடவடிக்கைகளில் உள்ள விவகாரங்கள்.
6. வேளாண் நிலங்கள் தவிர பிற சொத்துக்களை மாற்றுவது. ஆவணப் பதிவு.
7. கூட்டாண்மை, முகவாண்மை, போக்குவரத்து ஒப்பந்தங்கள் சிறப்பு ஒப்பந்தங்கள் உள்ளிட்ட ஒப்பந்தங்கள், ஆனால் வேளாண் நிலம் தொடர்பான ஒப்பந்தங்களை உள்ளடக்காது.
8. நடவடிக்கைகளுக்கு உள்ளிட்ட தீமைகள்
9. கடன் தீர்க்க இயலாத மற்றும் நொடிப்புநிலை
10. அறக்கட்டளை மற்றும் அறங்காவலர்கள்.
11. பொது நிர்வாகிகள் மற்றும் அதிகாரப்பூர்வ அறங்காவலர்கள்

    11-A நீதி நிர்வாகம், உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றம் தவிர அனைத்து நீதிமன்ற அமைப்பு மற்றும் செயல்முறை.
12. சாட்சியம், பிராமணங்கள், சட்டங்களை அங்கீகரிப்பது பொதுச் சட்டங்கள் மற்றும் ஆவணங்கள் நீதித்துறை நடவடிக்கைகள்
13. உரிமையியல் நடவடிக்கைகள், இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தபோது உரிமையியல் நடைமுறைச்சட்டத்தில் உள்ள விவரங்கள், வரம்பு மற்றும் சமரசம்.
14. நீதிமன்ற அவமதிப்பு ஆனால் உச்சநீதிமன்ற அவமதிப்பு உள்ளடங்காது.
15. சோம்பல், நாடோடி, புலம்பெயரும் பழங்குடிகள்.

**16.** சுவாதீனமின்மை, புத்திக் குறைபாடு, அவர்களை வைத்திருக்கும் இடங்கள்

**17.** விலங்குகளுக்கு தீங்கிழைத்தல்

17-A காடுகள்

17-B காட்டு விலங்குகள் மற்றும் பறவைகள் பதுகாத்தல்

18. உணவுப் பொருட்கள் மற்றும் பிற பண்டங்கள் பாதுகாத்தல்

19. பட்டியல் I ல் உள்ள வகைமுறைகளுக்கு உட்பட்ட மருந்து மற்றும் நச்சுகள்

20. பொருளாதார மற்றும் சமூக திட்டம்

20- A மக்கள்தொகை கட்டுப்பாடு மற்றும் குடும்பக்கட்டுபாடு

21. வாணிப மற்றும் தொழிற்சாலை ஏகபோகம் கூட்டு மற்றும் அறக்கட்டளைகள்

22. தொழிற்சங்கங்கள், தொழில் மற்றும் தொழிலாளர்கள் தகராறுகள்.

23. சமூக பாதுகாப்பு மற்றும் சமூக காப்பீடு, வேலைவாய்ப்பின்மை, வேலைவாய்ப்பு

24. பணிச் சூழல், சேமநலநிதி, வேலை கொடுப்பவரின் பொறுப்பு, தொழிலாளர் நட்ட ஈடு இயலா மற்றும் முதியோர் ஒய்வூதியம் மற்றும் பேறுகால சலுகைகள்.

25. பட்டியல் I உள்ளீடு 63,64,65 மற்றும் 66 உள்ளவற்றிற்கு கல்வி, தொழிற்கல்வி, மருத்துவக் கல்வி பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில் நுட்பக் கல்வி.

26. சட்ட மருத்துவ மற்றும் பிற தொழில்கள்

27. இந்தியா மற்றும் பாகிஸ்தான் அமைக்கப்பட்டதன் காரணமாக புலம்பெயர்ந்தவர்களின் நிவாரணம் மற்றும் மறுவாழ்வு

28. அறங்கள் மற்றும் அறங்காவல் நிறுவனங்கள், அறங்கள் மற்றும் சமய நிலைக்கொண்ட சமய நிறுவனங்கள்

29. மனிதன், விலங்குகள் அல்லது தாவரங்களை பாதித்த நோய்கள் ஒரு மாநிலத்திலிருந்து வேறு மாநிலத்திற்கு பரவாமல் தடுத்தல்.

30. பிறப்பு மற்றும் இறப்புப் பதிவு உள்ளிட்ட இன்றியமையால் புள்ளி விவரங்களை பதிவது
31. பெரிய துறைமுகங்கள் என பாராளுமன்றத்தால் அறிவிக்கப்பட்டவை அல்லாத வேறு துறைமுகங்கள்
32. உள்நாட்டு நீர்வழிகளில் நடைபெறும் இயந்திரப் படகுகள், அதன் போக்குவரத்து விதிகள், பட்டியல் I ல் குறிப்பிடப்பட்டுள்ள தேசிய நீர்வழிகள் உட்பட்ட பயணிகள் மற்றும் போக்குவரத்து.
33. வியாபாரம், வணிகம், உற்பத்தி, அளித்தல், பங்கிடுதல் பொது நலன் கருதி மத்திய அரசின் கட்டுப்பாட்டின்கீழ் இருப்பது அவசியம் என்று நாடாளுமன்ற சட்டத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ள தொழிற்சாலைப் பொருட்கள் மற்றும் அதைப்போன்ற இறக்குமதிப் பொருட்கள் உணவுப் பொருட்கள், உண்ணக்கூடிய எண்ணெய் வித்தும் மற்றும் எண்ணெய்கள், புண்ணாக்கு உள்ளிட்ட கால்நடைத் தீவனம், விதை நீக்கிய அல்லது விதை நீக்கப்படாத பருட்தி, பருத்தி விதைகள், கச்சா சணல்

33- A தர உருவாக்கல் தவிர்த்த எடைகள் மற்றும் அளவைகள்

34. விலைக் கட்டுப்பாடு
35. இயந்திரத்தால் இயங்கும் வாகனங்கள் மீது வரிவிதிக்கும் கொள்கைகள் வரி நிர்ணயம்
36. தொழிற்சாலைகள்
37. பாய்லர்கள்(கொதிகலன்கள்)
38. மின்சாரம்
39. செய்தித்தாள், புத்தகங்கள், அச்சகங்கள்
40. நாடாளுமன்றச் சட்டத்தால், அறிவிக்கப்படாத தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவை என தொல்பொருள் இடங்கள் மற்றும் மிச்சங்கள்

41. நாடற்றோருடையவை என சட்டத்தால் அறிவிக்கப்பட்ட சொத்துக்களின் (வேளாண் நிலம் உள்ளிட்ட) பொறுப்பு மேலாண்மை மற்றும் முடிவு கட்டுதல்
42. சொத்து கையகப்படுத்துதல் மற்றும் விடுவித்தல்
43. வரிகளுக்காகவும் மற்ற பொதுத் தேவைகளுக்காகவும் ஒரு மாநிலத்தில் வசூலிக்கப்படுதல் மாநிலத்திற்கு வெளியே வசூலிக்கத்தக்க பாக்கிகளையும் நிலவரி பாக்கிகளும் அடங்கும்.
44. நீதிமன்ற முத்திரை மூலமாக வசூலிகப்படும் கட்டணங்கள் தீர்வைகள் அல்லாத முத்திரைத் தீர்வைகள்
45. பட்டியல் 2 பட்டியல் 3 ல் குறிப்பிடப்பட்டுள்ளவைகளுக்கான விசாரணைகள் மற்றும் புள்ளி விவரங்கள்.
46. இப்பட்டியலில் உள்ளவை குறித்த உச்சநீதிமன்றம் அல்லாத பிற சீதிமன்றங்களின் அதிகாரவரம்பு மற்றும் அதிகாரங்கள்
47. இப்பட்டியலில் உள்ள விவரங்களுக்கான கட்டணங்கள் ஆனால் நீதிமன்றங்களின் கட்டணம் இதில் அடங்காது.
    - உள்ளீடு 11-A,17-A,20-A,25(கல்வி), 33-A: 42 வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தின்படி இணைக்கப்பட்டது.
    - உள்ளீடு 33: 3வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தின்படி (1954) மாற்றப்பட்டது.
    - உள்ளீடு 42: 7வது அரசியலமைப்புச் சட்டத்திருத்தத்தின்படி(1956) மாற்றப்பட்டது.

**ஏழாவது அட்டவணை**

**(சரத்துக்கள்: 344(1),357)**

**மொழிகள்:**

- இந்திய அரசிய்லமைப்புச் சட்டம் ஏற்கப்பட்ட போது 14 மொழிகள் இருந்தது.
- அஸ்ஸாமி, பெங்காலி, குஜராத்தி,ஹிந்தி, கன்னடம், காஷ்மிரி, மலையாளம், மராட்டியம், ஒடியா, பஞ்சாபி, சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு, உருது.
- 1967 ம் ஆண்டு 21 வது அரசியல் சட்டத்திருத்தத்தின்படி சிந்தி மொழி சேர்க்கப்பட்டது.
- 1992 ம் ஆண்டு 71 ஆவது அரசியல் சட்டத் திருத்தத்தின்படி மணிப்பூரி, கொங்கணி, நேபாளி மொழிகள் சேர்க்கப்பட்டது.
- 2003ம் ஆண்டு 92 வது அரசியல் சட்டத் திருத்தத்தின்படி போடோ, தோங்கரி, சாந்தாலி, மைதிலி மொழிகள் சேர்க்கப்பட்டன.
- இந்திய அரசியலமைப்புச் சட்டம் 22 மொழிகளை தேசிய மொழிகளாக அங்கீகரித்துள்ளது.
- ஒரியா என்பது 2011, 96 வது அரசியலமைப்புச் சட்டத்திருத்தத்தின்படி 'ஒடியா' என மாற்றப்பட்டது.

**ஒன்பதாவது அட்டவணை**

**சரத்து: 31(B)**

- சில சட்டங்களை பாதுகாக்கும் பொருட்டு இந்த அட்டவணை 1951 ம் ஆண்டு முதல் சட்டத்திருத்தத்தின்படி இணைக்கப்பட்டது.

**பத்தாவது அட்டவணை**

**சரத்துக்கள்: 102(2), 191(2)**

52 வது அரசியலமிப்பு திருத்தச் (1985) சட்டத்தின்படி இணைக்கப்பட்டது.

**கட்சித் தாவல் காரணமாக தகுதியின்மை குறித்த வகை முறைகள்**

- கட்சி தாவல் சட்டத்தின்படி நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களின் தகுதியின்மை குறித்து குறிப்பிடுகிறது.

- கட்சித் தாவல் சட்டத்தின்படி தகுதியின்மை செய்யும் அதிகாரம் மாநிலங்களவைத் தலைவர்/ சபாநாயகரிடம் உள்ளது. அதுவே இறுதியானது.
- உறுப்பினர் தான் சார்ந்துள்ள அரசியல் கட்சியின் உறுப்பினர் தகுதியை தானாக துறப்பது.
- தான் சார்ந்துள்ள கட்சியில் அறிவுரைக்கு மாறாக வாக்களித்தல் அல்லது வாக்களிக்காமல் இருத்தல்.
- ஒரு அரசியல் கட்சியின் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்படும் ஒரு உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு வேறு அரசியல் கட்சியில் சேர்ந்தால் அவர் அந்த அவையின் உறுப்பினராக இருப்பதற்கு தகுதி இல்லாதவர்.
- ஒரு அவையின் நியமன உறுபினர், அந்த அவையின் உறுப்பினரான நாளிலிருந்து 6 மாதத்திற்கு பிரகு வேறு அரசியல் கட்சியில் சேர்ந்தால் அந்த அவையின் உறுப்பினராக இருக்க தகுதி இல்லை.
- அவையின் உறுப்பினராக இருக்கும் ஒரு அரசியல் கட்சி வேறொரு அரசியல் கட்சியுடன் இணைந்தால் அந்த உறுப்பினர் மற்ற அரசியல் கட்சியின் உறுப்பினராகலாம் அல்லது இணைப்பை ஏற்காமல் தனியாக செயல்படலாம், அவரத்து உறுப்பிஅர் தகுதியின்மை ஆகாது.
- இணைக்கப்பட்ட அரசியல் கட்சியின் உறுப்பினராக உள்ள/இணைப்பை அக்கட்சியின் மூன்றில் இரண்டு பங்கிற்கு குறைவில்லாத உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.
- மக்களவையின் சபாநாயகர், துணை சபாநாயகர், மாநிலங்களவையின் துணைத் தலைவர், சட்ட மேலவையின் தலைவர், துணைத்தலைவர், ஒரு மாநிலத்தின் சட்டப்பேரவையின் தலைவர், துணைத்தலைவர், ஒரு மாநிலத்தின் சட்டப்பேரவையின் சபாநாயகர், துணை சபாநாயகர் ஆகிய பதவிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டால் உறுப்பினர் தகுதி இழக்க மாட்டார்.

- தலைவர் அல்லது சபாநாயகர் தக்தியின்மைக்கு ஆளானால் அதுகுறித்து அந்த அவை தேர்ந்தெடுக்கும் ஒரு உறுப்பினரிடம் அனுப்பப்படும். அவரது முடிவே இறுதியானது.
- இந்த அட்டவணையின்படி உறுப்பினர் தகுதியின்மை குறித்து விவகாரங்களில் நீதிமன்றம் தலையிட அதிகார வரம்பு இல்லை.

**பதினோறாவது அட்டவணை**

**(சரத்து: 243- G)**

- பஞ்சாயத்துகள் பற்றி குறிப்பிடுகிறது.
- 73 வது அரசியலமைப்பு திருத்தச்(1992) சட்டத்தின்படி இணைக்கப்பட்டது.
- 11 வது அட்டவணையில் 29 துறைகள் உள்ளன.

1. வேளாண் விரிவாக்கம் உள்ளிட்ட வேளாண்மை
2. நில மேம்பாடு, நிலச் சீர்திருத்த நடை, நில ஒருங்கிணைப்பு மற்றும் மண் வளப்பாதுகாப்பு
3. சிறு பாசனம், நீர் மேலாண்மை, நீர்த்தேக்க வளர்ச்சி
4. கால்நடை வளர்ச்சி, பால்வளம் மற்றும் பண்ணை முறை
5. மீன் பிடித்தல்
6. சமூக காடுகள் மற்றும் பண்ணைக் காடுகள்
7. சிறு காட்டுப் பொருட்கள்
8. உணவுப் பதப்படுத்தும் தொழிற்சாலைகள் உள்ளிட்ட சிறு தொழிற்சாலைகள்
9. காதி, கிராம மற்றும் குடிசைத் தொழில்கள்
10. கிராம வீட்டு வசதி
11. குடிநீர்
12. எரிபொருள் மற்றும் தீவனம்

13. சாலைகள், culverts, பாலங்கள், Ferries,நீர்வழிகள் மற்றும் தொலைத் தொடர்பு முறைகள்
14. மின்பகிர்வு உள்ளிட்ட கிராம மின்வசதி
15. மரபு சாரா எரிபொருள் வளங்கள்
16. வறுமை ஒழிப்பு திட்டங்கள்
17. கல்வி தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் உள்ளிட்டவை
18. தொழில்நுட்ப பயிற்சி மற்றும் தொழிற்கல்வி
19. முதியோர் மற்றும் முறைசாரா கல்வி
20. நூலகங்கள்
21. கலாச்சார நடவடிக்கைகள்
22. சந்தை மற்றும் கண்காட்சி
23. உடல் நலம் சுகாதாரம், மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் மருந்தகங்கள்
24. குடும்ப நலம்
25. பெண்கள் மற்றும் குழந்தை முன்னேற்றம்
26. மாற்றுத் திறனாளிகள் மற்றும் மனவளர்ச்சி குன்றியவர்கள் உள்ளிட்ட சமூக நலன்.
27. நலைவடைந்தோர் நலம், குறிபாக பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடி மக்கள்
28. பொது வினியோக முறை
29. சமுதாய சொத்துக்கள் பராமரிப்பு

பன்னிரண்டாவது அட்டவணை

(சரத்து: 243-W)

- நகராட்சிகள் பற்றி குறிப்பிடுகிறது.
- 74 வது அரசியலமைப்பு திருத்தச் (1992) சட்டத்தின்படி இணைக்கப்பட்டது.

- 12 வது அட்டவணையில் 18 துறைகள் உள்ளன.
    1. சிறுநகர் திட்டம் உள்ளிட்ட நகர் திட்டங்கள்
    2. நிலப் பயன்பாட்டு ஒழுங்குமுறை மற்றும் கட்டடங்கள் கட்டுதல்
    3. பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்கான திட்டமிடல்
    4. சாலைகள் மற்றும் பாலங்கள்
    5. உள், தொழில் மற்றும் வணிகக் காரணங்களுக்காக நீர் வினியோகம்
    6. பொது நலம், சுகாதார பாதுகாப்பு மற்றும் திடக்கழிவு மேலாண்மை
    7. தீயணைப்பு பணிகள்
    8. நகரக் காடுகள், சுற்றுச் சூழல் பாதுகாப்பு மற்றும் சுழல் மேம்பாடு
    9. மாற்றுத் திறனாளிகள் மற்றும் மன நலம் குன்றியோர் உள்ளிட்ட சமூகத்தின் நலிவுற்றோர் நலன் பாதுகாத்தல்.
    10. குடிசைப்பகுதிகள் முன்னேற்றம் மற்றும் மேம்பாடு
    11. நகர வறுமை ஒழிப்பு
    12. பூங்காக்கள், தோட்டங்கள், விளையட்டு திடல்கள் போன்ற நகர்ப்புற வசதிகளை ஏற்படுத்துதல்
    13. கலாச்சார, கல்வி மற்றும் அழகுணர்ச்சி சார்ந்தவைகளை மேம்படுத்துதல்
    14. புதைத்தல் மற்றும் புதைக்கும் இடங்கள், எரித்தல், எரித்தலுக்கான இடங்கள், மின் சக்தி எரியூட்டும் இடங்கள்
    15. கால்நடைக் குளங்கள், மிருகங்களுக்கான கொடுகளைத் தடுத்தல்
    16. பிறப்பு, இறப்பு பதிவு உள்ளிட்ட முக்கிய புள்ளி விவரங்கள்
    17. தெரு விளக்கு, வாகன நிறுத்தும் இடங்கள், பேருந்து நிறுத்தங்கள் மற்றும் பொது மக்களுக்கான வசதிகள், உள்ளிட்ட பொது வசதிகள் செய்தல்
    18. இறைச்சி வெட்டும் இடங்கள் மற்றும் தோல் பதனிடும் இடங்களை ஒழுங்குமுறைப்படுத்துதல்.

winmeen

## பகுதிகள்

| பகுதிகள் | அரசியலமைப்புச் சட்டம் | சரத்துக்கள் |
|---|---|---|
| பகுதி I | மாநிலங்கள் யூனியன் பிரதேசங்கள்/ பரப்பிடங்கள் | (1-4) |
| பகுதி II | குடியுரிமை | (5-11) |
| பகுதி III | அடிப்படை உரிமைகள் | (12-35) |
| பகுதி IV | அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகள் | (36-51) |
| பகுதி IV-A | அடிப்படைக்கடமைகள்(இப்பகுதி 42/1976 படி இணைக்கப்பட்டது) | (51-A) |
| பகுதி V | மத்திய அரசு | (52-151) |
| பகுதி VI | மாநிலங்கள் | (152-237) |
| பகுதி VII | (1956 ம் ஆண்டு 7 வது சட்டத்திருத்தத்தின்படி நீக்கப்பட்டது) | |
| பகுதி VIII | யூனியன் பிரதேசங்கள்/ மத்திய ஆட்சிப் பகுதிகள் | (239/241) |
| பகுதி IX | பஞ்சாயத்துகள் | (243-243- O) |
| பகுதி IX-A | நகராட்சிகள் | (243-P- 243-ZG) |
| பகுதி IX-B | கூட்டுறவு சங்கங்கள் | (243ZH- 243-ZT) |
| பகுதி X | பட்டியல் மற்றும் பழங்குடி பரப்பிடங்கள் | (244 - 244-A) |
| பகுதி XI | மத்திய மாநில அரசு உறவுகள் | (245- 263) |
| பகுதி XII | நிதி, சொத்து, ஒப்பந்தங்கள் மற்றும் வழக்கிடும் தன்மை | (264- 300-A) |
| பகுதி XIII | வியாபாரம், வணிகம் மற்றும் இந்திய பரப்பெல்லைகுள்ளான பரிமாற்றங்கள் | (301-307) |

| | | |
|---|---|---|
| பகுதி XIV | மத்திய மற்றும் மாநில அரசு கீழான பணிகள் | (308-323) |
| பகுதி XIV-A | தீர்ப்பாயங்கள் | (323-A - 323-B) |
| பகுதி XV | தேர்தல்கள் | (324-329) |
| பகுதி XVI | சில வகுப்பினர்கள் தொடர்பான சிறப்பான சட்ட வகைமுறைகள் | (313-342) |
| பகுதி XVII | அலுவலக மொழி | (343- 351) |
| பகுதிXVIII | நெருக்கடி கால நிலைகள் | (352 - 360) |
| பகுதி XIX | பிறவகைமுறைகள் | (361- 367) |
| பகுதி XX | அரசியலமைப்பு சட்டத்திருத்தம் | (368) |
| பகுதி XXI | தற்காலிக மாறக்கூடிய மற்றும் சிறப்பு வகைமுறைகள் | (369-392) |
| பகுதி XXII | தலைப்பு, அமலாக்கம் | (393- 395) |